# மெட்ரோ சைக்கிள்களில் 1 லட்சம் பயணியர் சவாரி

சென்னை, ஜூன் 29–

மெட்ரோ ரயில் நிலையங்களில், வாடகை இல்லாத சைக்கிள் வசதியை, ஒரு லட்சம் பயணியர் பயன்படுத்தியுள்ளனர்.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில் பயணியர் வருகையை அதிகரிக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம் பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

மெட்ரோ ரயிலில் வரும் பயணியர், செல்ல வேண்டிய இடங்களுக்கு சென்று, மீண்டும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்வதற்கு வசதியாக, வாடகை இல்லாத சைக்கிள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நேரு பூங்கா, கீழ்ப்பாக்கம், பச்சையப்பன் கல்லூரி, ஷெனாய் நகர், அண்ணாநகர், அண்ணா நகர் டவர், திருமங்கலம், கோயம்பேடு, அசோக் நகர், ஈக்காடுதாங்கல், ஆலந்தூர், பரங்கிமலை, சின்னமலை நிலையங்களில், மெட்ரோ நிர்வாகத்தின் சார்பில், இந்த வசதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பயணி, 3,000 ரூபாய், 'அட்வான்ஸ்' செலுத்த வேண்டும். சைக்கிள் வசதி தேவையில்லை என, திரும்ப அளிக்கும் போது, முழு தொகையும் பயணிக்கு திரும்ப அளிக்கப்படும்.

இத்துடன், திருமங்கலம், அண்ணாநகர் டவர், அண்ணாநகர் கிழக்கு மெட்ரோ ரயில் நிலையங்களில், 'பெடல்' சைக்கிள் நிறுவனம் சார்பிலும்; நேரு பூங்கா, ஷெனாய்நகர், அண்ணாநகர் கிழக்கு, திருமங்கலம், வடபழனி மற்றும் அசோக்நகர் நிலையங்களில், 'ஆதி' சைக்கிள் நிறுவனம் சார்பிலும், சில கட்டுப்பாடுகளுடன் இலவச சைக்கிள் வசதி செய்யப்பட்டுள்ளன.

**மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், 12 நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள சைக்கிள்களில், இதுவரை, 50 ஆயிரத்து, 500 பயணியரும்; தனியார் ஒப்பந்ததாரர்களால், ஒன்பது நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள சைக்கிள்களில், 51 ஆயிரத்து, 30 பயணியர் என, மொத்தம், 1 லட்சத்து, 1,530 பேர் சவாரி செய்துள்ளனர். இத்திட்டத்திற்கு, பயணியரிடம் வரவேற்பு அதிகரித்துள்ளது. இதனால் நிலையங்களில், கூடுதலாக சைக்கிள்கள் வைக்க, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**மெட்ரோ ரயில் அதிகாரி**

